மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இப்போது செஃசயர் இல்லம் தனிப்பட்ட ஒருவருடைய முயற்சியால், அவருடைய பெயரால் துவக்கப்பட்டு நடத்தப்படுகிறது. அதற்கும் அரசுக்கும் சம்பந்தம் இல்லை. இருந்தாலும் சமூக நல வாரியம் உதவித்தொகை கொடுத்து ஊக்குவித்து வருகிறது. இனிமேல் துவக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, செஃசயர் இல்லம் என்றால் என்ன? அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டின் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் வேறு எங்கோ சமரசம் செய்து கொண்டிருந்தார் என்று நினைக்கிறேன். செஃசயர் என்பது ஒருவருடைய பெயர். அவருடைய முயற்சியால் உடல் ஊனம் உற்றவர்களுக்கும், சமுதாயத்தில் நலிவுற்றவர்களுக்கும் உதவி அளிக்கும் வகையில் இந்தியா முழுவதும் இதுபோன்ற உதவி இல்லங்களை துவக்கி வருகிறார்கள். ஒருவர் பெயரில் நிறுவப்பட்ட நிறுவனம் அது.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் இத்தகைய இல்லங்களை மாநில அளவில் தனியார் ஏற்படுத்த முன்வந்தால் அரசு அதனைப் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தமிழகத்தில் சென்னையில் உள்ள கோவளம், மதுரையில் தோப்பூர், வேலூர் ஆகிய இடங்களில் இந்த இல்லங்கள் நடந்து வருகின்றன. அதற்குச் சமூக நல வாரியம் உதவி செய்து வருகிறது. இன்னும் எங்காவது யாராவது துவக்க முன் வந்தால் சமூக நல வாரியம் உதவத் தயாராக இருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு புத்தக வங்கிகள்.

*வினா எண். 569—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்களை வழங்கிட மத்திய அரசு புத்தக வங்கிகளை துவக்கியுள்ளதை இவ்வரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தமிழ்நாட்டில் அத்தகைய வசதி செய்து தரப்பட்டுள்ளதா?

1979 மார்ச் 30]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரப்பாண்டியன் :

(அ) மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரிகளில் பயிலும், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு கடனாக புத்தகங்கள் வழங்கிட ''புத்தக வங்கிகள்'' ஏற்படுத்தும் ஓர் திட்டத்தை அமுல்படுத்த மாநில அரசுகளுக்கு மத்திய அரசு மானியம் அளிக்க இசைந்துள்ளது.

(ஆ) இத்திட்டத்தை இம்மாநிலத்தில் அமுலாக்க தேவையான விவரங்களை இவ்வரசு அரிசனம் மற்றும் பழங்குடி நல இயக்குநரிடமிருந்து கோரியுள்ளது. இதற்கிடையில் மத்திய அரசு அளித்துள்ள மானியத் தொகையை மருத்துவக் கல்வி இயக்குநருக்கும் தொழில் கல்வி இயக்குநருக்கும் மாணவர்களின் எண்ணிக்கைப்படி பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

[முற்பகல் 9—40]

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, முதலில் உங்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த பக்கத்திலிருப்பவர்களின் பார்வை உங்கள் பார்வையில் படுவதில்லை. ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று தெரியவில்லை. சத்தம் போட்டுச் சொன்னால்தான் உங்கள் பார்வையில் படமுடியும் என்று தோன்றுகிறது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் தலைவரைப் பற்றிப் பேசக்கூடாது என்பது விதி. சத்தம் போடுகிறவர்களோடு திரு. மணிமாறன் அவர்களும் சேர்ந்து கொண்டால் எனக்கு ஆட்சேபணை ஒன்றும் இல்லை. கேள்வியை கேளுங்கள்.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, புத்தக வங்கி திட்டம் உயர்நிலைப் பள்ளிகளுக்கு இருக்கிறதா? உயர்நிலைப் பள்ளிகளுக்கும் இதை விஸ்தரித்தால் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் ஏழை எளிய மாணவர்கள், அரிசன மாணவர்கள் இப்படிப்பட்டவர்களுக்கு உதவியாக இருக்கும். ஆகவே, உயர்நிலைப் பள்ளிகளுக்கும் விஸ்தரித்து பண உதவி செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தப் புத்தக வங்கிகள் துவக்குகிற திட்டம் மத்திய அரசாங்கத்தின் மானிய உதவியோடு நடைபெற வேண்டிய திட்டம். இப்போது பொறியியல், மருத்துவம் இந்த இரண்டு துறைக்கு மட்டும் மத்திய அரசாங்கம் உதவி கொடுக்க முன்வந்துள்ளது. உயர் நிலைப் பள்ளிகளுக்கும் மத்திய அரசாங்கம் திட்டத்தை விரிவு படுத்த முன்வந்தால், அதை இந்த அரசு ஏற்றுக்கொண்டு செயல்படுத்த முன்வரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தினோடு புத்தக வங்கியை நடத்துவதற்கு ஆலோசனை செய்து வருவதாகச் சொன்னார்கள். எந்த ஆண்டு முதல் இந்தத் திட்டம் நடத்தப்படும்? இதற்கு மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்கியிருந்தால் எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறது? இந்த அரசாங்கம் இத்திட்டத்தை திட்டவட்டமாக எப்போது நடைமுறைக்குக் கொண்டுவரும்? ஆராய்கிறோம், நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்காமல் எந்தத் தேதியிலிருந்து இது நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்; தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தோடு ஆலோசனை செய்வதாக நான் சொல்லவில்லை. அவர்கள் உதவ முன் வந்திருப்பதாக குறிப்பிட்டிருக்கிறேன். இந்தத் திட்டம் 1978–79 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்த அரசாங்கம் ஆணையிட்டுள்ளது. மொத்தமாக மத்திய அரசாங்கம் 48 லட்சத்து, 69 ஆயிரத்து 500 ரூபாயை ஒவ்வொரு ஆண்டும் பகிர்ந்தளிக்க மத்திய அரசு முன் வந்திருக்கிறது. இந்த ஆண்டு 2 லட்சத்து 71 ஆயிரத்து 400 ரூபாய் அளித்து, அது மருத்துவம், பொறியியல் ஆகிய இரண்டுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். வி. இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குக் கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே புத்தகங்கள் வாங்குவதற்கான தொகை கிடைக்காததால், மாணவர்களின் பெற்றோர்கள் பெறுகின்ற அவல நிலையைப் போக்குவதற்கு கல்வி ஆண்டின் துவக்கத்திலேயே புத்தகங்களை எல்லாம் இலவசமாக வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, அரசு ஆவன செய்யும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, மெடிக்கல் காலேஜ், எஞ்சினியரிங் காலேஜ், ஆர்ட்ஸ் காலேஜ் போன்ற கல்லூரிகளில் படிக்கின்ற எல்லா மாணவர்களுக்கும் ஆந்திராவில் மெஸ் பீஸ், ஆஸ்டல் ரென்ட், புத்தகங்கள் இவைகள் எல்லாம் இலவசமாகவே கொடுத்து வரக்கூடிய திட்டம் அமல் நடத்தப்பட்டுக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இது போன்ற திட்டத்தை அமல் நடத்த இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

1979 மார்ச் 30]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற விவரங்கள் இந்த அமைச்சருக்குத் தெரியாது. இப்போது நாம் தமிழ்நாட்டில் இருக்கிறோம். ஆந்திராவுக்கு சென்று வந்த பின்னால் இதைப்பற்றி ஆலோசிக்கலாம்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி இவைகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு அதிகமான செலவு ஏற்படுகிறது. கிடைக்கின்ற உதவித் தொகையை விட அதிகமாகச் செலவு ஏற்படுகிறது. இப்படிப்பட்ட ஏழை எளிய மாணவர்களுக்கு அண்டை மாநிலங்களில் இந்தச் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்கிறது. அதேபோன்று மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி போன்றவற்றில் படிக்கும் ஏழை மாணவர்களுடைய செலவை இந்த அரசு ஏற்றுக்கொள்வதற்கு என்ன தயக்கம்? அதிகமான அளவில் செலவு ஒன்றும் ஆகாது. அதைச் செய்ய இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்; தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி இவற்றில் படிக்கின்ற மாணவர்களுக்கு ஏற்படுகின்ற எல்லாச் செலவுகளையும் ஏற்றுக் கொள்வதற்கு இந்த அரசுக்கு ஏன் தயக்கம் என்று கேட்டார்கள். நிதித் தாய் இன்னும் கருணை புரியவில்லை.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே புத்தக வங்கியைப் பற்றிச் சொன்னார்கள். மத்திய அரசு மானியம் கொடுப்பது பற்றியும் சொன்னார்கள். மாநில அரசு இத்தகைய ஏற்பாட்டிலே மானியம் கொடுக்கிறதா? கொடுத்தால் அதனுடைய தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த புத்தக வங்கி துவக்குவதற்கு மத்திய அரசு தான் எல்லா மாநிலங்களுக்கும் உதவித் தொகை அளித்து வருகிறது. அதே போல்தான் நம்முடைய தமிழ்நாட்டின் பங்காக ரூ. 2,71,400 கொடுத்திருக்கிறது. அதற்கு ஏற்றபடி மருத்துவக் கல்லூரிக்கும், பொறியியற் கல்லூரிக்கும் பிரித்து வழங்கியிருக்கிறோம். இதிலே மாநில அரசுக்கு இப்போது தொடர்பு இல்லை. அதைப் பிரித்து வழங்குகின்ற பொறுப்பிலே தான் இந்த அரசு இருக்கிறது.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகையை கல்லூரி நிர்வாகத்தினர் பாங்கிகளிலே போட்டு விட்டு, அந்த மாணவர்களுக்கு உதவிப் பணம் கொடுப்பதில்

காலதாமதம் ஏற்படுத்துவதன்மூலம் மாணவர்களின் படிப்பு பாதிக்கப்படுகின்றது. ஆகவே, அப்படிப் பாங்குகளிலே போட்டு விட்டு, காலதாமதமாக வழங்குகின்ற நிர்வாகத்தினர் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இதுபோன்ற புகார்கள் இதுவரை எதுவும் வரவில்லை. அப்படி வருமானால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னாலே பின்தங்கியோர் நலனைக் கவனித்து வந்தார்கள். இந்தப் பின்தங்கியோர்களிலே, வீக்கர் செக்ஷன்களுக்கு இப்படிப்பட்ட உதவிகளைச் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இதுவும் நலிந்தோர்களுக்கு உதவி செய்யும் திட்டம் தான். இன்னும் சமுதாயத்தில் வீக்கர் செக்ஷனாக உள்ளவர்கள் பற்றி கவனத்திற்குக் கொண்டு வந்தால், மத்திய அரசாங்கம் உதவுவதற்கு இந்த அரசு பரிந்துரை செய்யும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மத்திய அரசு இப்போது மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி மாணவர்களுக்குக் கொடுக்கின்ற இந்த உதவித் தொகை, அவர்கள் புத்தகங்கள் முழுதும் வாங்குவதற்கு, அவர்கள் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருப்பதால், இந்தக் குறைபாட்டைப் பூர்த்தி செய்வதற்கு இந்த மாநில அரசாங்கம் அந்த மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி மாணவர்களுக்கு முழு அளவு புத்தகங்கள் வாங்குவதற்கு உதவி செய்ய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1978—79 ஆம் ஆண்டு முதல் தான் அமலுக்குக் கொண்டுவரப்பட்டு, நவம்பர் மாதம் அந்தத்தொகையை வழங்க இந்த அரசாங்கம் வழங்க ஆணையிட்டிருக்கிறது. இனி மேல்தான் அதிலே என்ன குறை இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியவரும். அப்படி வருகிற நேரத்தில், அதை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி மாணவர்களுக்கு மத்திய அரசு 1978-79 ஆம் ஆண்டிலே நிதி உதவி வழங்கியதன் மூலமாகப் பலன் பெற்ற மாணவர்கள் எத்தனை பேர்கள், கல்லூரி வாரியாக?

1979 மார்ச் 30]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, கடந்த நவம்பர் மாதம்தான் அதற்குரிய அந்தத்தொகையை அது சம்பந்தப்பட்ட இயக்குநர்களுக்கு வழங்க ஆணையிட்டுள்ளோம். இனிமேல் தான் இதனால் பயனடைந்தவர்களுடைய எண்ணிக்கை சரியாகத் தெரியும். வாய்ப்பு வரும்போது அவசியம் தெரிவிக்கிறேன்.

பேருந்துப் போக்குவரத்து குறித்த குழு.

*வினா எண். 570—திரு. எஸ். ஜே. இராமசாமி, திரு. என் கிட்டப்பா, திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1976ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பேருந்துப் போக்குவரத்து பற்றி ஆய்வு செய்வதற்கென பட்டாபிராமன் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டதா ?

(ஆ) அக்குழு தனது அறிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் நகல் ஒன்று பேரவைமுன் வைக்கப்படுமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) கூடிய விரைவில் அந்த அறிக்கை பேரவை முன் வைக்கப்படும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, இந்த பட்டாபிராமன் தலைமையிலான குழு தனது பரிந்துரையை எப்போது அளித்தது? அந்தப் பரிந்துரையினுடைய உயரிய நோக்கத்தை அமைச்சரின் செயலர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டபடி அதனுடைய நோக்கம் சாலைப் போக்குவரத்துக் கழகங்கள், மற்றும் பொறியியற் கூடங்கள் ஆகியவைகள் செயல்படுகின்றதை ஆராய்ந்து, இதிலே சில